நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை 5, அவர்களின் செயல்முறைகள்,
முன்னிலை. டாக்டர். ப.செந்தில்குமார், இ.ஆ.ப.,

ந.க.எண்.45475/2010/எப்1 நாள். 10 -2-2011

பொருள்: பணிக்குழு – தமிழ்நாடு நகராட்சி பொறியியல் பணி – மண்டல செயற்பொறியாளர். சேலம் – திரு டி.அன்பழகன், விடுப்பு முடிந்த பணியில் சேர்வது – சேலம் மண்டல செயற்பொறியாளராக பணியிட மாறுதல் செய்தல் – சம்பந்தமாக.

படிக்கப் பட்டவை:
1. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.45475/2010/எப்1, நாள்.28.1.2011.
2. திரு டி.அன்பழகன், முன்னாள் மண்டல செயற்பொறியாளர், செங்கல்பட்டு பணி சேர் அறிக்கை நாள்.7.2.2011.
3. நகராட்சி நிர்வாக ஆணையரின் ஆணை நாள்.10 .2.2011.

ooOoo

ஆணை.

படிக்கப்பட்டவை இரண்டில் காணும் திரு டி.அன்பழகன், முன்னாள் செங்கல்பட்டு மண்டல செயற்பொறியாளரின் பணி சேர் அறிக்கை விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு, திட்டப்பணிகள் தொய்வின்றி நடைபெறவும், நிர்வாக நலன் மற்றும் அவசர அவசியம் கருதி, தமிழ்நாடு நகராட்சி பொதுப்பணி விதி 31 (சி), விதிகள் 1970–ன் கீழ் சேலம் மண்டல செயற்பொறியாளராக திரு டி.அன்பழகனை பணியிட மாறுதல் செய்து உத்தரவிடப்படுகிறது. சேலம் மண்டல செயற்பொறியாளர் பொறுப்பினை கூடுதல் பொறுப்பாக கவனித்து வரும் திரு அ.சேதுரவன்த், செயற்பொறியாளர் (திட்டம்) அவர்கள் மண்டல செயற்பொறியாளர் பொறுப்பினை திரு டி.அன்பழகன் அவர்களிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

இப்பணியிட மாறுதல் தனியரது விருப்பத்தின் பேரில் செய்யப்படுவதால் அன்னார் மாறுதல் பயணப்படி பெற தகுதியற்றவராகிறார்.

சேலம் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் திரு டி.அன்பழகனை, பணியில் சேர்த்து, பணியில் சேர்ந்த நாளினை உடன் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

இச்செயல்முறை பெற்றுக் கொண்டமைக்கான ஏற்பளிப்பினை உடன் அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/–ப.செந்தில்குமார்
நகராட்சி நிர்வாக ஆணையர்.

பெறுநர்.

1) திரு டி.அன்பழகன்,
46–1/55, இராமலிங்க நகர் லே அவுட் 4 வது தெரு,
சாய்பாபா காலனி, போஸ்ட் ஆபிஸ் எதிரில்,
அழகேசன் ரோடு இரண்டாவது குறுக்கு தெரு,
கோயம்புத்தூர் – 11.

நகல்.

1. அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத்துறை, சென்னை 600 009.
2. மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர், செங்கல்பட்டு / சேலம்
3. இவ்வலுவலக JCMA / ADMA / CE Table
4. இவ்வலுவலக வலை தளத்தில் பதிய

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

கண்காணிப்பாளர்.
10/2/11

D:\F1-2008\45475_10 Note.doc